# NSW HEALTH

## COVID-19 Key Points – Tuesday 5 October 2021

NSW GOVERNMENT

**நியூ சவுத் வேல்ஸ் ஹெல்த்-இலிருந்துவரும் 2021 அக்டோபர் 5-க்கான கோவிட்-19 பற்றிய முக்கிய குறிப்புகள்**

- தடுப்பூசியின் விகிதத்தைப் பொறுத்தவரை, ஒரு மருந்தளவைப் பெறுவதில் 88.5%-ஐயும், இரண்டு மருந்தளவுகளையும் பெற்றுக்கொள்வதில் 67.5% -ஐயும், நியூ சவுத் வேல்ஸ் தற்போது எட்டியுள்ளது.
- தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள முன் வந்த உங்கள் அனைவருக்கும் நன்றி. நாங்கள் இப்போது நியூ சவுத் வேல்ஸ்-இல் 10.4 மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசி மருந்தளவுகளைச் செலுத்தியுள்ளோம்.
- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணி நேரத்தில், 608 பேர் உள்ளூர் கோவிட்-19 நோய்த்தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர். கவலைக்கிடமாக, ஏழு பேர் உயிரிழந்துள்ளனர்.
- உங்கள் பகுதியில் உள்ள கட்டுப்பாடுகளை அறிந்துவைத்திருப்பதைத் தயவுசெய்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். https://www.nsw.gov.au/covid-19/rules -க்குச் செல்லுங்கள்.
- நீங்கள் நியூ சவுத் வேல்ஸ்-இல் எங்கு இருக்கிறீர்கள் என்பது ஒரு பொருட்டல்ல, ஆனால் மிகச்சிறியளவு நோயறிகுறிகள் இருந்தாலும்கூட, பரிசோதனையைச் செய்துகொள்ள நீங்கள் முன் வருவது முக்கியம் ஆகும். எவ்வளவு விரைவாக கோவிட் நோய்த்தொற்றாளர்களை நாம் கண்டறிகிறோமோ, அவ்வளவு விரைவாக சமூகத்தில் நோய்த்தொற்றுப் பரவுவதை எம்மால் நிறுத்த முடியும்.
- கசூலா (Casula), லிவர்பூல் (Liverpool), பாங்க்ஸ்டவுன் (Bankstown), பஞ்ச்பௌல் (Punchbowl), ஆஷ்க்ரொஃப்ட் (Ashcroft), மின்டோ (Minto), கிரான்வில் (Granville), கில்ட்ஃபோர்ட் (Guildford) மற்றும் ஜிண்டாபைன் (Jindabyne) ஆகியவையே அதிகூடிய நோய்த்தொற்றாளர்கள் உள்ள பகுதிகளாக இருக்கின்றன.
- கடந்த சில நாட்களாக, எண்ணிக்கைகள் வீழ்ச்சியடைந்துவருவதை நாங்கள் காண்கிறோம், ஆனால் பரிசோதனையைச் செய்துகொள்வதிலும் வீழ்ச்சியைக் கண்டுள்ளோம். எந்த நோய்த்தொற்றாளர்களையும் தவறவிடாமல் இருக்க, நாம் கட்டாயமாகத் தொடர்ந்தும் விழிப்புடன் இருக்க வேண்டும்.
- தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள முன் வந்த உங்கள் அனைவருக்கும் நன்றி - எங்கள் அனைவரையும் பாதுகாப்பாக வைத்திருக்க நீங்கள் உதவுகிறீர்கள்.